**C.O.S.No. 05/2023** **தேதி – 11.08.2025**

**வா.சா.1. – கண்ணன்**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் வாதி கம்பெனியில் 2002 ல் இருந்து வேலை பார்த்து வருகிறேன். ஆரம்பத்தில் நான் தொழில் நுட்ப மேலாளராக பணியில் சேர்தேன். நான் 2021 லிருந்து கம்பெனி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்வதற்கான விபரங்களை நானும், எனது கம்பெனியின் இயக்குனரும் சொன்னோம். பிரதிவாதி பால் உற்பத்தி மற்றும் பால் சார்ந்த பொருட்கள் விற்பனை செய்து வருகிறார். வாதி கம்பெனி பிரிண்டர் பிலிம்ஸ் தயார் செய்து விற்பனை செய்து வருகிறது. பிரதிவாதி வாங்கும் பிலிம் ஆனது பால் பாக்கெட் பேக்கிங் செய்வதற்காக வாங்கப்பட்ட பிலிம் என்றால் சரிதான். பால் பாக்கெட் பேக்கிங் செய்வதற்காக வாங்கப்பட்ட பிலிம் என்பதால் அது லீக்கேச் இல்லாமல் இருக்க வேண்டும் என்றால் சரிதான். பிரதிவாதி கம்பெனி எத்தனை வருடங்களாக பிலிம் வாங்கி வருகிறார்கள் என்றால் 2017 ம் ஆண்டிலிருந்து பிலிம் வாங்கி வருகிறார்கள். வாதி கம்பெனிக்கும், பிரதிவாதி கம்பெனிக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் அனைத்தும் மின்னஞ்சல் மூலம் நடைபெறும் என்றால் மின்னஞ்சல் மற்றும் போன்கால் மூலமாகவும் நடைபெறும். எனது கம்பெனியில் சேல்ஸ் செய்வதற்கு தனியாக அலுவலர்கள் உள்ளனர். ஆரம்பத்தில் பிரதிவாதி நிறுவனத்தில் எதாவது பிலிம் சம்பந்தமாக ஆர்டர்கள் எதுவும் கொடுக்கப்பட்டால் அதை சேல்ஸ் டீமில் உள்ள அலுவலர்கள் கவனிப்பார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி ஆர்டரில் பைனல் செய்து ஆர்டர் அனுப்பும் போது மேற்படி பிலிம்ஸ் உடன் டெஸ்ட் ரிப்போர்ட் அனுப்புவது வழக்கம் என்றால் சரிதான். 2017 ல் பிரதிவாதி கம்பெனியில் இருந்து எங்கள் கம்பெனிக்கு வந்து ஆய்வு செய்த பிறகே, பிரதிவாதி கம்பெனிக்கும், எங்கள் கம்பெனிக்கும் இடையே வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். 2017 க்கு பிறகு பிரதிவாதி கம்பெனியிலிருந்து எங்கள் கம்பெனிக்கு வந்து ஆய்வு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 2017 க்கு பிறகு எங்கள்

நிறுவனத்தில் உள்ள இயந்திரங்களில் மாற்றங்கள் எதுவும் செய்துள்ளோமா என்று பிரதிவாதி கம்பெனிக்கு தெரியாது என்றால் நாங்கள் மாற்றங்கள் எதுவும் செய்யவில்லை. ஆனால் பிரதிவாதி கம்பெனி அவர்களுடைய இயந்திரங்களில் மாற்றங்கள் செய்துள்ளனர். 08.07.2019 ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமாக வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே பல்வேறு தொடர் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது சம்பந்தமாக எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 08.07.2019ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமாக வாதிக்கும், 1ம் பிரதிவாதி கம்பெனிக்கும் எந்தவித பேச்சுவார்த்தையும் இல்லை. அப்படி எதுவும் பேச்சு வார்த்தை இருந்தால் எனக்கு தெரிந்திருக்கும். 08.07.2019ம் தேதியன்று அலோக் மெகரா என்பவர் மேலாளராக பணியில் இருந்தார். தற்போது அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். 08.07.2019ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமாக வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள போக்குவரத்துக்கள் அனைத்தும் மின்னஞ்சல் மூலமாகத்தான் இருந்ததா என்றால் மின்னஞ்சல் மற்றும் போன்கால் மூலமாகவும் இருந்தது. போன்கால் மூலமாக யார் என்ன பேசினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.5 பர்ச்சேஸ் ஆர்டருடன் சேர்ந்து டெஸ்ட் ரிப்போர்ட் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். டெஸ்ட் ரிப்போர்ட் யார் யார் செய்யப்பட்டது என்று பெயர் குறிப்பிட்டு இல்லை என்றால் சரிரான். டெஸ்ட் ரிப்போர்ட் என்ன பார்முலாவில் செய்யப்பட்டது என்றால் சரிதான். இது இந்தியன் ஸ்டேன்டர்டு படி செய்து வருகிறோம். பிரதிவாதி கம்பெனி எதன் அடிப்படையில் டெஸ்ட் செய்ய வேண்டும் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதால் எங்களுடைய ஸ்டேன்டர்டு படி செய்து வருகிறோம். எங்களுடைய ஸ்டேன்டர்டு என்று நான் சொல்வது ஐ.எஸ். ஸ்டேன்டர்டு என்பதாகும். ரிப்போர்ட் செய்தது சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியும். ரிப்போர்ட்டில் ஐ.எஸ் ஸ்டேன்டர்டு என்று குறிப்பிட்டு இல்லை என்றால் சரிதான். 10.12.2018ல் 1ம் பிரதிவாதியால் எங்களுடைய கம்பெனிக்கு பர்ச்சேஸ் ஆர்டர் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பர்ச்சேஸ் ஆர்டருடன் இதேபோல் ஒரு டெஸ்ட் ரிப்போர்ட் அனுப்பியுள்ளோமா என்றால் அனுப்பியுள்ளோம். 10.12.2018ல்

கொடுக்கப்பட்ட பர்ச்சேஸ் ஆர்டரின் பேரில் கொடுக்கப்பட்ட பிலிமில் பகுதி பிலிம் நிராகரிக்கப்பட்டது என்றால் இல்லை. தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கான நிருபண வாக்குமூல விபரம் வழக்கறிஞரிடம் நான்தான் தெரிவித்தேன் என்றால் சரிதான். 10.12.2018ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டரில் 431 கிலோ பிலிம் நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**